| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 357/2010 |
| **DATE** | : | **06.04.2026** |
| **பெயர்** | : | **செல்வி** |
| **தந்தை பெயர்** | : | **சங்கர்** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. எனது கணவர் கூல்ட்ரிங்ஸ் கடை வைத்திருந்தார். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரனம் தற்போது ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 05.04.2010 அன்று 1ம் வாதி அவரது சொத்தை வாங்கினார் என்று சொன்னால் சரிதான். சந்திரபாலாவிற்கு எவ்வளவு சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனது கணவருக்கு தான் சரியாக தெரியும். 1ம் வாதி 2ம் வாதிக்கு சொத்தை விற்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனது கணவர் உயிருடன் இருந்த காலகட்டம் வரை அவர் தான் வழக்கு சொத்து சம்மந்தமான விவரங்களை பார்த்து வந்தார். சந்தை மதிப்பு முத்திரை தாள், பதிவு கட்டணம் பற்றி பிரிவு 47(A)ன் கீழ் நடைமுறை நிலுவையில் இருந்த விவரம் எனக்கு எனது கணவர் இறந்ததற்கு பிறகு தான் தெரியும்.

2. 1ம் வாதியின் பெயரில் மேற்படி நடைமுறை முடிந்து முத்திரை மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டு பத்திரம் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் சமீபத்தில் தெரிய வந்தது. மேற்படி விவரம் தெரிய வந்ததற்கு பிறகு அந்த ஆவணம் சம்மந்தமாக நான் ஏதாவது வழக்கோ, மேல் முறையீடோ செய்தேனா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7ல் நான் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் ராமகிருஷ்ண நாயுடுவின் பெயரில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN